**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி: 03.10.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், மொத்தம் 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இளைஞர்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்ட, தொடர்ச்சியாக 8 சதவிகித வளர்ச்சியை பராமரித்தல் அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

நாட்டின் பால்வளத் துறை கடந்த 11 ஆண்டுகளில், 70 சதவிகித அளவுக்கு, அபார வளர்ச்சி அடைந்திருப்பதாக, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சிறிய வகை கார்கள் மற்றும் இதர பொருட்களுக்கான ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளதால், பொருளாதாரத்தில் அடுத்தடுத்து பல சாதகமான விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன.

மோடி இளையோர் திட்டம் (19)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், மொத்தம் 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இளைஞர்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார். இளைஞர்களுக்கான திறன்

மேம்பாட்டு வசதிகளை மேம்படுத்தும் வகையில், நாடெங்கிலும், ஆயிரம் அரசு ஐடிஐ தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துவதற்கான பிஎம்-சேது திட்டமும் இதில் அடங்கும். பீகாரில் 5 லட்சம் பட்டதாரிகளுக்கு, 2 ஆண்டு காலம் மாதம் ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் வகையிலான, முதலமைச்சரின் புதிய திட்டத்தையும் நாளைய விழாவில் பிரதமர் தொடக்கி வைக்கிறார். தொழில்கல்வி மற்றும் தொழிலக தேவைகளுக்கு ஏற்ற கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பீகாரில் நிறுவப்பட்டுள்ள, ஜனநாயக் கர்ப்பூரி தாக்கூர் திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகத்தையும், பட்னா – என்ஐடி உயர் கல்வி நிறுவனத்தின் புதிய வளாகத்தையும் பிரதமர் திறந்து வைத்து, மாநிலத்தின் வேறு நான்கு பல்கலைக்கழகங்களில் புதிய கல்வி மற்றும ஆராய்ச்சி வசதிகளை நிறுவும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நவோதயா மற்றும் ஏகலவ்யா பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ள ஆயிரத்து 200 தொழில் திறன் ஆய்வகங்களையும் பிரதமர் தொடக்கி வைத்து, ஐடிஐ தொழிற்பயிற்சிப் படிப்புகளில் சிறப்பிடம் பெற்றவர்களை பாராட்டி கவுரவிக்கிறார்.

*மன் கீ பாத்* 1 (9)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் மன் கீ பாத் வானொலி நிகழ்ச்சி, இன்றுடன் 11 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. 11 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் தான், பிரதமரின் முதலாவது மனதின் குரல் நிகழ்ச்சி,

ஆகாசவாணியில் ஒலிபரப்பாயிற்று. இதுவரை பிரதமர் திரு நரேந்திர மோடி 126 மனதின் குரல் நிகழ்ச்சிகள் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றி உள்ளார். மன் கீ பாத் நிகழ்ச்சி வெறும் வானொலி நிகழ்ச்சியாக மட்டுமின்றி, நாட்டின் மூலை முடுக்குகளையும் சென்றடையக் கூடிய கலாச்சார மற்றும் சமூகப் புரட்சியாகவே திகழ்கிறது. இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு......

**(வாய்ஸ்)**

*மன் கீ பாத்* 2 (11)

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த11 ஆண்டுகளில் தமது மன் கீ பாத் நிகழ்ச்சிகள் மூலமாக முக்கியமான பல்வேறு சமூக கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்தும், இதுபோன்ற பிரச்சனைகளில் மக்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்தும் பேசியிருப்பதால், நாட்டில் சாதகமான முக்கிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமருக்கும், நாட்டு மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் பாலமாகவே, மன் கீ பாத் நிகழ்ச்சி மேம்பட்டுள்ளது. மன் கீ பாத் நிகழ்ச்சியை பொறுத்தவரை, நேயர்கள் தான் நிகழ்ச்சி நாயகர்கள் என்று, மன் கீ பாத் நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். மன் கீ பாத் நிகழ்ச்சியின் நீண்ட கால பயணம், நாடெங்கிலும் இருந்து உணர்வூக்கம் மிகுந்த வெற்றிக்

கதைகளை தொகுத்து அளிக்கும் மாலையாகவே திகழ்வதாக அவர் தெரிவித்தார்.........

(வாய்ஸ்-மோடி)

*மன் கீ பாத்* 3 (7)

**(வாய்ஸ்)**

அரசுக்கும், மக்களுக்கும் இடையிலான நேரடி ஆலோசனை பாலமாக திகழும் மன் கீ பாத் நிகழ்ச்சியினால், மக்களிடையே சமூக மாற்றத்திற்கான உணர்வுகள் தூண்டப்பெற்று, தேச ஒற்றுமையும் வலுவாகி உள்ளது. இந் நிகழ்ச்சியினால், அரசின் கொள்கைகள், மக்கள் இயக்கமாக மாறியுள்ளன. வலுவான ஒரு தலைவரின் குரல் நாட்டின் எல்லா இடங்களையும் சென்றடைந்து, முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாகவே மனதின் குரல் நிகழ்ச்சி திகழ்கிறது.

*நிர்மலா* (16)

**2047 ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா** என்னும் இலக்கை எட்ட, தொடர்ச்சியாக 8 சதவிகித வளர்ச்சியை பராமரித்தல் அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் கவுடில்யா பொருளாதார மாநாட்டில்

உரையாற்றிய அவர், இந்திய பொருளாதாரம் மிகுந்த நெகிழ்வு தன்மையுடன் நீடித்த அடிப்படையில் வளர்ச்சி அடைந்து வருவதாகவும், உலக அளவிலான அதிர்வுகளை தாங்கிக் கொள்வதற்கான இந்திய பொருளாதாரத்தின் திறன், வலுவானது என்றும் கூறினார். உலக அளவிலான ஏற்றத் தாழ்வுகளுக்கு இடையே, உள்ளூர் காரணிகளின் அடிப்படையில் வளர்ச்சி அடைந்து வருவதே, இந்திய பொருளாதாரத்தின் சிறப்பு என்றும், அவர் குறிப்பிட்டார். வளர்ச்சியடைந்த இந்தியா என்பதுடன், சுயசார்பு இந்தியா என்ற இலக்கையும் இணைத்து, பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்படுத்தி வருவதாக மத்திய நிதியமைச்சர் கூறினார். நிதி உறுதிப்பாடு, மூலதன செலவீனங்கள், மற்றும் பணவீக்கத்தின் கட்டுப்பாட்டில் அரசு தொடர்ச்சியான முறையில் கவனம் செலுத்தி வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

*அமித் ஷா- பால்வளம்* (11)

நாட்டின் பால்வளத் துறை கடந்த 11 ஆண்டுகளில், 70 சதவிகித அளவுக்கு, அபார வளர்ச்சி அடைந்திருப்பதாக, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். இந்தியாவின் பால்வளத் துறைதான் உலகிலேயே மிக வேகமாக வளரும் துறை என்று ஹரியானா மாநிலம் ரோஹ்தக் மாதிரி தொழில் நகரில், சபர் பால் பண்ணையின் புதிய பால் பதனீட்டு ஆலையை திறந்து வைத்து

பேசுகையில் கூறினார். 325 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆலை, நாட்டிலேயே மிகப் பெரிய பால் பதனீட்டு ஆலையாக அமைந்திருப்பதாகவும், டெல்லி தலைநகர பிரதேசத்தின் ஒட்டுமொத்த பால் தேவைகளை இந்த ஆலை பூர்த்தி செய்யும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார். நாட்டில் கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

*ஜிஎஸ்டி- மோட்டார் வாகனம் 1 (9)*

சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களும் பயன் பெறும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழா, கடந்த மாதம் 22 ஆம் தேதி முதல், நாடெங்கிலும் அமலாகி வருகிறது. அடுத்த தலைமுறை ஜிடிஸ்டி சீர்திருத்தங்கள், நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிமைப்படுத்துவதில் முக்கிய நடவடிக்கையாக திகழ்கின்றன. இந்த சீர்திருத்தங்களின் கீழ், பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் மீது அறிவிக்கப்பட்டுள்ள வரிக் குறைப்பினால் மக்களுக்கு கணிசமான ஆறுதல் கிடைத்துள்ளது. சிறு கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மீதான வரிக் குறைப்பு குறித்து, இன்று இந்த சிறப்பு தொகுப்பில் காண்போம்........

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி -மோட்டார் வாகனம் 2 (11)

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ் சிறு கார்கள் மீதான 28 சதவிகித ஜிஎஸ்டி, 18 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால் நுகர்வோருக்கு முக்கிய பலன் ஏற்பட்டுள்ளது. இதனால், நடுத்தர குடும்பங்கள் மீதான வரிச்சுமை குறைவதுடன் சிறு நகரங்களில், சிறிய வகை கார்களின் விற்பனை ஊக்கம் பெற்றுள்ளது. இதேபோல, 350 சிசி வரை திறன் கொண்ட இருசக்கர வாகனங்களும், 28 சதவிகித வரி அடுக்கில் இருந்து, 18 சதவிகித வரி அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளன. இதனால், வாங்குவோர் பயன் பெறுவதுடன், வாகன உற்பத்தி மற்றும், தொடர்புடைய இதர துறைகளில் வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும் என்றும், புதிய வரி விகிதங்களால் பொருளாதாரத்தில் அடுத்தடுத்து பல சாதகமான விளைவுகள் ஏற்படும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அஸ்வினி வைஷ்ணவ் (10)

ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று ஜப்பானிய போக்குவரத்து துறை அமைச்சர் திரு ஹிரோமாசா நகானோ-வுடன் இணைந்து, சூரத் அதிவேக ரயில் திட்டத்தின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டார். மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் திட்டத்தின் பல்வேறு முக்கிய அம்சங்களை இவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். கட்டுமான பணிகளின் வேகம் மற்றும் தரம் குறித்து இரு தலைவர்களும்

திருப்தி வெளியிட்டனர். இந்தியாவின் முதலாவது புல்லட் ரயில் திட்டக் கனவை நிறைவேற்றுவதில், இந்தியாவிற்கும், ஜப்பானுக்கும் இடையிலான ஆழமான கூட்டாண்மை உறவுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆய்வு அமைந்திருந்தது.

ஆபரேஷன் சிந்தூர் 1(13)

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை, துரிதமாகவும், துல்லியமாகவும் குறிக்கோள்களை நிறைவேற்றிய நடவடிக்கையாக எப்போதும் நினைவில் கொள்ளப்படும் என இந்திய விமானப்படை தலைவர் ஏர் சீப் மார்ஷல் அமர்ப்ரீத் சிங் கூறியுள்ளார். வரும் 8 ஆம் தேதி 93 ஆவது விமானப்படை தினம் கொண்டாடப்படுவது குறித்து, இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டாகவும், மும்படைகளுக்கு சரியான வழிகாட்டு நெறிமுறைகளும், உரிய அதிகாரங்களும் வழங்கப்பட்டதே, இந்நடவடிக்கையின் வெற்றிக்கு காரணம் என்றும் கூறினார். நவீன காலத்தில் போர் முறைகள் வேகமாக மாறி வருவதால், நாடு, எதிர்கால போருக்கான தயார் நிலையை தொடர்ச்சியாக பராமரித்தல் அவசியம் என்றும் விமானப்படை தலைவர் வலியுறுத்தினார்.

வானிலை (10)

இன்று தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 9 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை அடையார் மண்டலம், வேளச்சேரி மண்டலம் உள்ளிட்ட இடங்களில் தலா 3 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிறிக்கெட் (5)

இந்தியா-வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கு இடையே அகமதாபாத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின், இரண்டாம் நாளான இன்று ஆட்ட நேர இறுதிவரை, இந்திய அணி, தனது முதலாவது இன்னிங்சில், 5 விக்கெட் இழப்பிற்கு, 448 ரன் எடுத்திருந்தது. வெஸ்ட் இண்டீஸ் அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 162 ரன்.

*பளு தூக்குதல் (4)*

நார்வேயில் நடைபெறும் உலக பளு தூக்கும சாம்பியன் பட்ட போட்டிகளின், மகளிர் 48 கிலோ எடை பிரிவில், இந்திய வீராங்கனை மீரா பாய் சானு, வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். இப்பிரிவில் வடகொரியா வீராங்கனை, தங்கப் பதக்கமும், தாய்லாந்து வீராங்கனை, வெண்கல பதக்கமும் வென்றனர்.

*ஜவுளி ஊக்குவிப்பு (8)*

ஜவுளித் துறைக்கான உற்பத்தி திறனுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்திற்கு, புதிய விண்ணப்பங்களை சமர்பிக்க கடைசி நாள் இவ்வாண்டு இறுதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டத்தில் பங்கேற்று பயன்பெற முதலீட்டாளர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பை வழங்கும் வகையில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜவுளித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆர்வமுள் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் அதிகாரபூர்வ இணையதளம் மூலம் தங்களின் தொழில் உத்தேசங்களை சமர்பிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், மொத்தம் 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இளைஞர்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்ட, தொடர்ச்சியாக 8 சதவிகித வளர்ச்சியை பராமரித்தல் அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

நாட்டின் பால்வளத் துறை கடந்த 11 ஆண்டுகளில், 70 சதவிகித அளவுக்கு, அபார வளர்ச்சி அடைந்திருப்பதாக, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சிறிய வகை கார்கள் மற்றும் இதர பொருட்களுக்கான ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளதால், பொருளாதாரத்தில் அடுத்தடுத்து பல சாதகமான விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன.